செய்தி வெளியீடு எண் : 1490 நாள் : 26.07.2023

**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களின் தலைமையில் கே.எம்.எஸ். 2023–24 கொள்முதல் பருவத்தில் நெல்கொள்முதலுக்கான முன்னேற்பாடுகள் மற்றும் ஆயத்தப்பணிகள், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டம்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கே.எம்.எஸ் 2022–2023 கொள்முதல் பருவத்தில் 3497 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள்திறக்கப்பட்டு 01.09.2022 முதல் 25.07.2023 வரையில் 42.29 இலட்சம் மெ.டன் நெல்கொள்முதல் செய்யப்பட்டு 8.82 இலட்சம் விவசாயிகளின் வங்கி கணக்கில் 9096.67கோடி ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. சென்ற கொள்முதல் பருவத்துடன் ஒப்பிடுகையில் கே.எம்.எஸ் 2022–2023 கொள்முதல் பருவத்தில் 0.97இலட்சம் மெ.டன் கூடுதலாக கொள்முதல் செய்த அனைத்து அலுவலர்கள் மற்றும் கடைநிலை ஊழியர்களையும் பாராட்டினார். இக்கொள்முதல் பருவத்தில்தோராயமாக மேலும் 2.5 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காரீப் 2023–2024–ஆம் பருவத்திற்கான நெல் கொள்முதல் செய்திட முன்கூட்டியே 01.09.2023 முதல் அனுமதிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தையொட்டி, எதிர்வரும் கே.எம்.எஸ். 2023–2024 கொள்முதல் பருவத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்கொள்முதலுக்கு தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்தப்பணிகள் தொடங்குவது குறித்து இப்பணியில் ஈடுபடக்கூடிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உரியஅறிவுரைகள் வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் விவாசயிகளிடமிருந்து நெல்லினை கொள்முதல் செய்திட நடவடிக்கை

மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், நேரடி நெல்கொள்முதல் நிலையத்திற்கு நெல்லினை கொண்டுவரும் விவசாயிகளிடம் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும், கொள்முதல் செய்த நெல்லுக்கு உரிய தொகையினை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக விரைவாக வழங்க ஆவன செய்யவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை பாதுகாப்பாக பராமரித்து உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்ப தேவையான போக்குவரத்து ஒப்பந்ததாரர்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இந்திய அளவில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நெல்லின் தேவையை கருத்தில் கொண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகளிடமிருந்து கொண்டு வரப்படும் நெல்லினை விவசாயிகளை காக்க வைக்காமல் அரசு நிர்ணயிக்கும் திரிபுகளுக்குள் உடனுக்குடன் துரிதமாக கொள்முதல் செய்து அரவை ஆலைகளுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமெனவும் உரிய தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக விரைவாக வழங்க வேண்டுமெனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 5434 எண்ணம் 200 கிலோ மின்னணு எடைதராசுகள், 26147 எண்ணம் தார்பாலின் பாய்கள், 26807 எண்ணம் தார்பாலின்உறைகள், 3149 எண்ணம் நெல்தூற்றும் இயந்திரங்கள், 3543 எண்ணம் ஈரப்பதமானிகள், 2.76 கோடி 50 கிலோ கொள்ளளவு கொண்ட புதிய சாக்குகள் இருப்பில் உள்ளதால் அந்தந்த மண்டலங்களில் கொள்முதலுக்கு தேவையான சாக்குகள், குத்தூசி, எடைத்தராசு, சணல், நெல்தூற்றும் இயந்திரம், ஈரப்பதமானி, கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அட்டிகளாக அடுக்கி வைக்க தேவையான கட்டை, கற்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாக்க தேவையான தார்பாலின் உள்ளிட்ட பொருட்களை பற்றாக்குறையின்றி தயார் நிலையில் வைத்துக்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகள் மீது தனிகவனத்துடன் ஒரு நெல்மணி கூட மழையில் நனையக்கூடாது என்று உத்தரவிட்டுள்ளார்கள். ஆட்சிப்

பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 238 கோடி ரூபாய் நிதி கொடுத்ததன் காரணமாக 2.86 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையிட்ட 213 நெல் சேமிப்புக் கிடங்குகள் 10 மாவட்டங்களில் 18 இடங்களில் குறுகிய காலத்தில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், 80 இடங்களில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் அமைக்கும் பணிகளும் 12 இடங்களில் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 ஆயிரம் மெ.டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்டக் கிடங்குகள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சேமிப்பு கிடங்குகளை புனரமைக்கும் பணிகள் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் துவங்கப்படவுள்ளன. 8.7.2023 அன்று சென்னை கோபாலபுரத்தில் உள்ள நவீனமயமாக்கப்பட்ட அமுதம் மக்கள் அங்காடியினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். சென்னை அண்ணாநகரில் உள்ள அமுதம் மக்கள் அங்காடியினை நவீனமயமாக்கும் பணிவிரைவில் துவங்கப்படவுள்ளது.

இந்த ஆண்டில் புதிதாக டெல்டா மாவட்டங்களில் 65 ஆயிரம் மெ.டன் கொள்ளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் 52 ஆயிரம் மெ.டன் கொள்ளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 17500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 7 புதிய வட்டக் கிடங்குகளும் அமைக்கப்படவுள்ளன. மேலும், மதுரை மண்டல அலுவலகத்தின் பழைய கட்டடத்தை அகற்றி அந்த இடத்தில் மண்டல அலுவலகம், அமுதம் நியாய விலைக்கடை மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய அடுக்கு மாடிக்கட்டடம் 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் அலுவலகங்கள், கிடங்குகள், அங்காடிகள், நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் ஆகிய இடங்களில் பழுதுகள் ஏற்பட்டிருப்பின் அதனை உடனடியாக சரிசெய்யவும், உணவு மானிய கோரிக்கையின்போது அறிவித்த அறிவிப்புகளில் தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவரும் கட்டடங்களை விரைவாககட்டி முடித்திட கட்டுமான செயற்பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையானது அரிசிக் கடத்தலைத் தடுத்தல், வெளி மாநிலங்களிலிருந்து முறைகேடாக நெல்கொண்டு வருவதைத்தடுத்தல், டீசலில் கலப்படத்தைத் தடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அரசு பொறுப்பேற்றவுடன் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையை வலுப்படுத்தி குற்றங்களைத் தடுப்பதற்காக திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் புதிதாக இரண்டு மண்டலங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் 6 புதிய அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

07.05.2021 முதல் 25.07.2023 வரையிலான காலக்கட்டத்தில் அத்தியாவசியப் பொருள்கள் சட்டம், 1955–ன்கீழ் 17,959 வழக்குகள்பதிவுசெய்யப்பட்டு 16 கோடியே 32 இலட்சத்து 59 ஆயிரத்து 422 ரூபாய் மதிப்பிலான பொது விநியோகத் திட்டப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்ட கடத்தலில் ஈடுபட்ட 18,240 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தலில் ஈடுபட்ட 154 நபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 4005 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியின் கடைசி இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கு கூடுதலாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருள்கள் கடத்தலைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசுசெயலாளர் முனைவர். டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல்துறை தலைவர் திருமதி. ந. காமினி, இ.கா.ப., மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in